ஜூனியர் லயன் காமிக்ஸ்

# அதிரடி மன்னன்!






● **லயன் காமிக்ஸ் வாசகர் மன்றம்.**
**இறைச்சகுளம்,**

மிகக் குறுகிய காலத்திற்குள் வெற்றி முழக்கமிடும் லயன், திகிலைப் போன்று ஜுனி-யரும் விளங்கும் என்பதில் யாதொரு சந்தேக மும் இல்லை!

● **வெ. ஸ்ரீபாபு, துறையூர்.**

லயன் தந்தையும், திகில் தாயும் பெற்றெ டுத்த இரு ரத்தினங்கள் ஜுனியரும். மினியும்!

வளர்ந்தவுடன் பரபரப்பூட்டுபவர் பலர்
பிறந்தவுடன் பரபரப்பூட்டுபவர் சிலர்!!
அச்சிலரில் இருவராக இருக்கும்
ஜுனியரும், மினியும் நீடுழி வாழ்க!

"இரண்டுக்கு மேல் வேண்டாம்" என்ற அரசின் கருத்தை மறுத்து, லயன் குடும்பம், மென்மேலும் பல்கிப் பெருக வாழ்த்தும்!

● **S. பிரகாஷ், அசூர்.**

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி! எங்களுக்காக காமிக்ஸ் உலகில் புதிய சரித்-திரம் படைத்தான் விஜயன்!

● **ஆ. ராசன், புளியங்குடி.**

உலகம் சுற்றும் அலிபாபா அருமையிலும் அருமை. சித்திரங்கள் பூரிக்கும்படியாக அழ-காக வரைந்திருந்தீர்கள்.

● **ரசிகர்கள், பம்பாய்.**

உலகம் சுற்றும அலிபாபா எங்கள் தெரு வையும் ஒரு சுற்று சுற்றி வந்து விட்டார்-அட்டைப்படம் படுஜோர். இவ்வளவு மலிவில் சூப்பர் சித்திரக் கதையா? அதுவும் கலரில்-வாவ்!

● **க. கலிபத்துல்லா, குணமங்கலம்.**

அலிபாபாவும் முஸ்தபாவும் செய்த கூத்து என் வயிற்றை புண்ணாக்கியது. இப்போதும் கூட நினைத்தால் போதும். சிரிப்பு தாங்கவில்லை கிட் கிட் மந்திரத்தை மாற்றி சொல்லும்போது சிரிப்போ சிரிப்பு தாங்க முடியவில்லை!

சொல்லுக்கு அகத்தியன், வில்லுக்கு விஜயன், அழகுக்கு முருகன், சிரிப்புக்கு ஜுனியர், விற்பனைக்கு நீங்கள், கொள்முத-லுக்கு நாங்கள்.

**வாசகர் கடிதம்!**


அதிரடி மன்னன்
தூம்!
இனிய வசந்த காலத்திற்கு நல்வரவு கூறி மாண்டனா பகுதி எங்கிலும் உல்லாசமாக பண்ணி-சைத்துக் கொண்டிருந்தன, பறவையினங்கள்...
டூம்!
ஆனால்— பொறுப்-பான அரசு அதிகாரி-களுக்கோ— பிரச்னைகள்...
.. திண்டாட்டம்... திணறல் —
மனம் தளராதே பயலே— இதோ... வந்து சேர்ந்து விட்டோம்!
காட்டாறு
புறப்படுமுன், இங்கே நிலவரம் இவ்வளவு மோசமாக இருக்கு மென்று நான் நினைக்க-வேயில்லை!
தலைவிதி...! எப்படியோ வந்து தொலைத்தாயிற்று— சே ஆனாலும் இப்படியா பனி உருகி ஆளை விழுங்கப் பார்க்கும்?



அப்பாடா... இனி இங்கிருந்து கால்நடையாக செல்லலாம்!
திடமான தரைப்-பகுதி— அதோ...
ஆ ஐயோ-
தொபுக்!
ஓ இன்ஸ்பெக்டர்— நீங்களா? அடடா... அந்த பலகைகளை சற்று முன்னர்தான் சேற்றின் மீது போட்டு வைத்தோம்
ஏ என்... இப்...படி?
மலையிலிருந்து பனி உருகத் தொடங்கும் போது, இங்கே ஏற்படும் பிரச்னைகள் ஏராளம்... —விரைவில், நீங்களே தெரிந்து கொள்வீர்கள்...!
இப்போதே ஓரளவு புரிந்து விட்டது!
அங்கே என்ன பேரிரைச்சல்?
ஓ... அதுவா? வெள்ள நீரோட்டம் எழுப்பும் ஓசை!
ஹே... இங்கே வாருங்கள் — வெள்ள நிலைமையை பார்வையிட இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார்...
ஹாஹ்ஹா! கடைசி வேளையிலாவது வந்து சேர்ந்தாரே!


நாளுக்கு நாள் வெள்ளம் அதிகரித்து வருகிறது! அடுத்து, மலையுச்சியிலுள்ள பனிக் குன்றுகள் உருகி வழியத் தொடங்கும் போது இந்த அணைக்கட்டு இருந்த இடம் தெரியாமல் போய் விடுவது நிச்சயம்!
அணை உடைந்து போனால் பலமைல் தொலைவுக்கு விளை நிலங்கள் அனைத்தும் நீண்ட காலத்துக்கு நீரினுள் அமிழ்ந்து போய்விடும்!
தொல்லைதான்!
தொல்லை? —என்ன, கிண்டல் பண்ணுகிறீரா! இங்கே பெரும் பாலோருடைய வாழ்க்கையே நாசமாகிப் போய் விடும் ஐயா!
கிண்டலா... நானா? ஐயோ—அப்படி-யெல்லாம் இல்லை!
அரசு அதிகாரிகளைப்பற்றி எனக்குத் தெரியாதா...! படுபயங்கரமான பாதிப்புக்களை காட்டினால், பார்த்து விட்டு அலட்சியமாக ஓ... மோசம் தான்! என்று சாதாரணமாக சூள் கொட்டுவார்கள்!
என்னை — ஒரு வார்த்தை பேசவிடுகிறாயா?
ஓ... ஸாரி ஸார் —வந்து...
நன்றி!
அன்பார்ந்த பெருமக்களே...அந்த மலை இப்பிரதேசத்திற்கு நிரந்தர அச்சுறுத்தலாக இருந்து வரு-கிறது ... எனவே, அதை நாம் தகர்த்து விடலாம்—வெடி வைத்து...!



என்னது... மலையை தகர்ப்பதா?
அதெப்படி சாத்தியம்?
வெள்ள நீர் இன்னும் உக்கிரமாக அல்லவோ பாய்ந்து வரும்!
நான் சொல்வதை சற்று கவனமாக கேளுங்கள் — இந்த வெள்ள நீரோட்டத்தை இரண்டு வகையில் சமாளிக்கலாம். ஒன்று — குறுக்கே அணைகள் கட்டுவது...
ஆனால் இப்போது அதற்கெல்லாம் அவகாசமில்லை, எனவே, மாற்றுவழிதான் சிறந்தது!
அதாவது, டைனமைட்டை பயன்படுத்தி நீரின் போக்கை திசை திருப்பி விடுவது!
பிரச்னையை நான் தீர்க்கமாக ஆராய்ந்து விட்டேன். இந்த வழி முறை சாத்தியமானதே..! இதோ— இங்கே இருக்கிறது...மலை!
...இந்த, இந்த இடங்களில் பாறைகளை தகர்ப்பதன் மூலம், நீரோட்டத்தை மலையின் வேறொரு சரிவு நோக்கி திருப்பி விடலாம். இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது!
பிரமாதமான யோசனை!
வித்தியாசமான முயற்சி...!
ஆனால், சிரமமான காரியம்!
ஆபத்தானதும் கூட! டைனமைட்டுகளை கையாண்டு பழக்கமில்லை எங்களுக்கு...!


சிக்பில் இதையெல்லாம் ஏற்கனவே விபரமாக சொல்லி விட்டார்... முன்கூட்டியே அனைத்தையும் திட்டமிட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்...
ஆகும் செலவில் பாதியை அரசு ஏற்கும்...! அரசின் சட்ட திட்டங்களின் வரையறைக்குட்பட்டு வேலையை தொடங்குவோம்...!
டைனமைட் நிபுணர் ஒருவர் கன்ஸ்மோக்கிலிருந்து அடுத்த பயணிகள் கோச்சில் இங்கே வந்து சேருவார்... என் உதவியாளர் அவரை வரவேற்று அழைத்து வருவார்...!
பிரமாதமான ஏற்பாடு— இன்ஸ்பெக்டர் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்!
அதே வேளையில், கன்ஸ்மோக் நகரின் பிரதானசாலையில்—
நகர பெருமக்களே... ஜன்னல்களையெல்லாம் உடனே திறந்து வையுங்கள்
ஜன்னல்களை திறந்து வைப்பதா...? இது என்ன — உத்தரவு புதுமையாக இருக்கிறதே!
ஆ... வ்வ்!
அடக்கடவுளே...!
டைனமைட் நிபுணர் பௌம்-பௌம்!
ஜன்னல்களை ஏன் திறந்து வைக்கச் சொன்னார்கள் என்று இப்போதல்லவா புரிகிறது!
ஆமாம்... வெடிவிபத்து ஏற்பட்டால் சேதம் குறைவாக இருக்குமல்லவா?


அந்த மலையை விட்டால் இங்கே வெடி வைத்து தகர்க்க வேறென்ன இருக்கிறது!
தொழிலில் ரொம்ப ஆர்வமுடையவர் நீங்கள்!
ஆமாம்! எனக்கு ரொம்பவும் பிடித்த-மான தொழில் இது! அடடா... டைனமைட் வைப்பதில் கிடைக்கிற உற்சாகம், ஆனந்தம் இருக்கிறதே... அப்பப்பா...!
உங்க கிட்டே நெருப்பு பெட்டி இருக்குமா?
இ...ல்...லை...!
ஏன்... இப்படி பயந்து ஓடுகிறான்?
இந்த போலீஸ் மெடல்களைப் பார்த்து மிரண்டுபோய் விட்டிருப்பான்!
இதோ... ஒருவழியாக சுருட்டு பற்றவைக்க நெருப்பு அகப்-பட்டது!
ஆஆ . வ்!
சலார்!


கிறுக்குப் பயலே .! இருபது செண்ட் பெறுமானமடா அந்த சுருட்டு... ஹூம்— எனக்கு வருகிற கோபத்தில் உன்னை...
என்ன... என்ன விவகாரம்— இங்கே?
?
ஓ...சிக் பில்— நீயா! வா... உனக்கு இவரை அறிமுகம் செய்து வைக்கிறேன்...
...இவர்—மிஸ்டர் பௌம் பௌம், டைனமைட் நிபுணர் இன்ஸ்பெக்டர் விடுத்த அழைப்பின் பேரில் வந்திருக்கிறார்!
டைனமைட் நிபுணரா? பார்த்தாலே புரிகிறது...!
உங்க கிட்டே வத்திப்பெட்டி இருக்கிறதா?
ஸாரி... இல்லை ! வாருங்கள்— இன்ஸ்பெக்டரின் வீடு இதோ அருகில் தான் இருக்கிறது... நனைந்து போயிருக்கிறீர்கள்— முதலில் உங்களை துவட்டிக் கொள்ளுங்கள்... ஆடைகளையும் உலரப் போடலாம்!


இன்ஸ்பெக்டரின் வீட்டிற்கு செல்கிறார்கள்...
அங்கே இந்த தடியனை கைது செய்தார்கள் என்றால் நல்லது... அமைதிக்கு பங்கம் விளைவிக்க வந்த பயங்கரவாதி!
ஆனாலும் ஆர்டின் படா துணிச்சல்காரர் தான்— டைனமைட்டைக் கண்டும் துளி பயமில்லையே!
ஆகா...!
அதோ... நெருப்பு — அதன் இதமான நெருக்கம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்!
ஸாரி... முதலில் ஈர உடைகளை களையுங்கள்...! போர்த்திக் கொள்ள ஒரு துப்பட்டா தருகிறேன்.
ம்ம்... அதுவும் சரிதான்!
இதோ— என்னுடைய சுருட்டு— பாக்கட்...
நீங்களும் ஒன்று பற்ற வையுங்களேன்!
ம்ம் . நான் பொதுவாக புகைப்பதில்லை— எப்போதாவது தான் . பரவாயில்லை... இன்று உங்களுக்காக... உங்களுடைய திருப்திக்காகத்தான்— ...கொடுங்கள்!


ஹா... ஹா...ஹா..! நல்ல வேடிக்கை... எனக்கு மிகவும் பிடித்தமான விஷமச் சுருட்டு— எல்லோருமே மாட்டிக் கொள்கிறார்கள்...!
என் சொந்த தயாரிப்பு! ஒருமுறை கொஞ்சம் கூடுதலாக வெடிமருந்தைக் கலந்து விட்டேன் போலும் ! அதைப் புகைக்க முயன்ற இளைஞன் இன்றைக்கு எங்கோ ஆவியாக அலைந்து கொண்டிருக்கிறான்..!
இந்த மனிதரால் ஏகப்பட்ட விவகாரம் ஏற்படும் போலிருக்கிறது... தீவிரமாக இவரை கண்காணிக்க வேண்டும்!
வெள்ளம் வர வர அதிகரித்துக் கொண்டே போனது. எனவே, மறுநாள் காலையில்...
முதல் கட்டமாக இந்தப் பாறையை பிளக்க வேண்டும்— ஓரளவு வெள்ள நீர் இந்தப் பக்கமாக திரும்பிவிடும்...
செய்து விடுவோம்...!


இவ்வளவு டைனமைட் குச்சிகள் தேவைப்படலாம்!
ஹே... எங்கே— பிடி .. பார்க்கலாம்!
ஆ... வ்!
ஆ . ஆ... வ்வ்... வ்... ஆ வ்!
அம்.. மாடி ..!
ஹா...ஹா...ஹா...! ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படித்தான் மிரண்டுபோகிறார்கள்— இந்த வகையான டைனமைட் குச்சிகள் வெடிக்க ப்யூஸ் (திரி) அவசியம் என்று யாருக்குமே தெரியவில்லை! எனக்குப் பிடித்தமான விஷமங்களில் இதுவும் ஒன்று ..!
??
கெட்டது போ... இது போன்ற விஷமங்களை இனியும் செய்தாரென்றால் இங்கிருப்போர் அனைவரும் ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு மடிந்து போவது உறுதி!
சரி... வேலையை ஆரம்பிக்கலாமா?
நீங்கள் அனைவரும் இருநூறு வரை எண்ணி விட்டு சட்டென்று தரையோடு படுத்துக் கொண்டு விடுங்கள்— அதையடுத்து பயங்கர வெடிச்சப்தம் காதில் விழும்! தம்பி... நீ வா— என்னோடு...!


அதிகாரமும் ஆணவமும் கலந்த இவன் பேச்சு எரிச்சலூட்டுகிறது... பொதுக்காரியம் ஆகவேண்டி-யிருக்கிறதே என்பதால் பொறுத்துக் கொள்ள வேண்டி-யிருக்கிறது—
நீ குறிப்பிட்டது சரிதான்— இந்தப் பாறையை அப்புறப் படுத்தத்தான் வேண்டும்...!
சுமார் 15 தப்படி தொலைவில் ஏதாவது ஓர் இடுக்கில் இந்தக் கட்டையை கொண்டு போய் வை...
இவனுக்கு உதவியாளனாக வந்ததால் நிறைய புது விஷயங்களை கற்றுக் கொள்ளப் போகிறேன்... டைனமைட் என்றால் என்ன— அதை எப்படி வெடிப்பது... இப்படியாக—
ஹலோ... முடிந்ததா?
ஆமாம்— முடிந்தமாதிரிதான்...
..!ப்யூஸில் தீயை பற்ற வைத்து விட்டேன்—ஓடி வா... சீக்கிரம்!
!?


198... 199 . ஜாக்கிரதை—
...உடனடியாக அது வெடித்துத் தொலைத்தால் நான் கொத்துக் கறியாகிப் போய்விடுவேன்!
பூம்! பூம்!
சத்
சத
அந்த பிரம்மாண்டமான பாறை இருந்த இடம் தெரியாமல் தூள் தூளாகி சிதறியதையடுத்து ஓரளவு வெள்ளநீர் புதிய தடத்தில் திரும்பியது...
வெற்றி... வெற்றி— சாதித்து விட்டேன்..!
ஹே .. தம்பி... நீ வெளியே வரலாம்— இனி ஆபத்தில்லை!


இதைக் கேட்க எத்தனை ஆனந்தமாக இருக்கிறது...!
ரொம்பவும் கதிகலங்கிப் போயிருக்கிறாய்... நீ ஓடி விலகிய வேகம் போதாது... நன்றாக பயிற்சி எடுத்துக் கொள்— இல்லையேல் சேதமுற்று விடுவாய்!
செத்துப் பிழைத்து வந்திருக்கிறேன்— கிண்டல் பண்ணுகிறாயா?... உன்னை—
அட...பயலே..
இந்தா ... வாங்கிக்கோ— தொடுவாயா இனி... என்னை!
டும்!
அங்கே என்ன கூச்சல்..! அந்த டைனமைட் நிபுணர் ஒரு விநோதமான ஆசாமி... ரொம்பவும் தான் அலட்டிக் கொள்கிறார்...
பாராட்டுக்கள்... தோழர்களே..! ஆனால்,... வந்து—
ஏன் ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள்?



என்ன விவகாரம் இங்கே? அடிதடி; சண்டை சச்சரவை-யெல்லாம் அனுமதிக்க மாட்டேன்!
ஓகோ... உங்களுடைய அதிகார வரம்பைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது... எனக்கு...
தயவு செய்து .. மன்னித்துக் கொள்ளுங்கள் . !
அட அநியாயமே... போலீஸ்-காரர்கள் ஏன்தான் இப்படி பலவீனமாக இருக்கிருர்களோ.. தெரியவில்லை!
தொலைகிறது! கருராக ஒன்று சொல்கிறேன்— ஒரு காரியத்தில் நான் இறங்கும போது பிறருடைய இடை-யூறை சகித்துக் கொள்வதற்-கில்லை... எனக்கு முழு அதிகாரம் வேண்டும.
இந்த வேலை முடியும் வரை இங்கே நான்தான் பாஸ்— உங்களுக்கு சம்மதம் என்ருல் சரி— இல்லையேல் என் கணக்கை தீர்த்துக் கொடுங்கள்— கிளம்பிச் சென்று விடுகிறேன்... இப்போதே!
நீ . நீ... கிங் பௌம் — பௌம் — உன்னைக் கைது செய்-கிறேன்!
ஸாரி இன்ஸ்பெக்டர் — உங்களுடைய தீர்மானம் சரியாகப் படவில்லை எனக்கு!


வெள்ள நீரோட்டத்தை திசை திருப்பி விட வேண்டியது அவசியம் மட்டுமின்றி அவசரமும் கூட...
இந்த டைனமைட் நிபுணரால் மட்டுமே இப்போதைக்கு அதை சாதிக்க முடியும்...
முட்டாள்தனமாக பேசாதீர்கள்... இந்த போக்கிரி எதையும் உருத்தெரியாமல் அழித்து விடக்கூடியவன்... சட்டத்தின் பாதுகாப்பு உங்களுக்கு இல்லையெனில் இவனிடம் நீங்கள் மண்டியிட்டுக்கிடக்க நேரிடலாம்!
முதலில் வேலை தொடரவேண்டும்— சட்ட பாதுகாப்பைப் பற்றி பிறகு பேசலாம்...! எங்களுககு அப்படியே சட்ட பாதுகாப்பு தேவையெனில் நாங்கள்...
அதை ஆர்டினின் பொறுப்பில் விட்டு விட தீர்மானித்து விட்டோம்!
ஆர்டின் வாழ்க!
இவர் எங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பார்!
உங்களை ரொம்பவும் தான் அவமானப்படுத்தி விட்டார்கள் **இன்ஸ்பெக்டர்**.. நீங்கள் இப்போது என்ன செய்கி...
மூடு வாயை... உன் அறிவுரை தேவையில்லை... இனி ஒரு நிமிடம் கூட நான் இங்கே நிற்கப் போவதில்லை. நன்றி கெட்ட இந்த மூட ஜனங்கள் நிச்சயம் பின்னர் வருத்தப்படப் போகிறார்கள்...!


இன்ஸ்பெக்டர் மனமுடைந்து போய் விட்டார்...
இல்லை— சற்று உணர்ச்சி வசப்படக் கூடியவர் ... அவ்வளவுதான். ஏற்பட்ட அவமதிப்பை சகித்துக் கொள்ள முடியவில்லை ... அவரால்!
அவமதிப்பு ? உணர்ச்சி வசப்படுபவர்...? -- ஒரு அருமையான சூழ்ச்சித் திட்டம் உருவாகிறது என் மனத்தில்...
ரொம்ப வலிக்கிறதா ஸார் ... போய் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்...
அதற்கெல்லாம் ... வாய்ப்பில்லை இங்கே—
அடேய் முரட்டு கொரில்லா... பூசல் கிளப்பி இங்கே அமைதியில்லாமல் பண்ணி விட்ட உன்னை — இரு... இரு...
மறுநாள் வேலை தொடங்கியது— கால்வாய் ஒன்று வேகமாக உருவாகியது...
இன்ஸ்பெக்டர் போய்விட்டதால் ஒன்றும் மோசமாகி விடவில்லைதான்...!
பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, இந்த இடத்திலேயே தங்க ஏற்பாடு செய்து கொடுத்தால் வேலை இன்னும் வேகமாக நடக்கக்கூடும்...


கிங் பௌம்—பௌம் ஓய்ந்து உட்கார்ந்து விடவில்லை அதோ... அங்கே டைனமைட்டை பயன் படுத்தி எதையோ தகர்த்துக் கொண்டிருக்கிறார்... பார்!
ஆக... தோழர்களே வேலை மும்முரமாக நடக்கிறதா! வம்பு, விவகாரம்—பிரச்னை இப்படி ஏதுமில்லையல்லவா?
குற்றம் குறை ஏதுமில்லை மிஸ்டர்-ஆர்டின்!
மிஸ்டர் ஆர்டின்! என்று சொன்னான்...? ஓ... இவர்களை நான் ரொம்ப அக்கறையாக கவனித்துக் கொள்ள வேண்டும்—ஆகா... தங்கமான ஜனங்கள்...!
அந்த ஆர்டின் நல்ல ஆசாமி- ஆனால் டைனமைட் பற்றியெல்லாம் தெரியாது!
அவருடைய வேலை—நமக்கு பாதுகாப்புக் கொடுப்பது... அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள அவர் சம்மதித்திராவிடில், அந்த சிடுமூச்சி இன்ஸ்பெக்டரையல்லவா நாம் சகித்துக் கொண்டிருக்க நேர்ந்திருக்கும்?
ஆனால்— சனிக்கிழமை... சம்பள தினம்! விவகாரமான நாளாக இருக்கும்— அவருக்கு பொறுப்பு கூடுதலாகும்...
ஹே... உங்களிருவரையும் தான்— உங்களோடு நான் கொஞ்சம் பேசவேண்டும்...!


ஓ... இன்ஸ்பெக்டரா!
மெள்ளப் பேசு... நான் இங்கியிருப்பது வேறு யாருக்கும் தெரியக் கூடாது!
ஓசைப்படுத்தாமல் அருகே வந்து உட்கார்ந்து நான் சொல்லப் போவதை கவனமாக கேள்...
சொல்லுங்கள்... ஒரே சஸ்பென்ஸாக இருக்கிறது—
நான் ஒரு அருமையான சூழ்ச்சி பண்ணப் போகிறேன். உங்களுடைய ஒத்துழைப்பு தேவை.
நான் ஆர்டினை தந்திரமாக எமாற்றப் போகிறேன். நீங்கள் ஒன்றும் தெரியாதது போல் வாயை மூடிக்கொண்டிருந்தாலே போதுமானது... சரியா?
ஆர்டின் நல்லவன்தான்— ஆனால் அந்த வெடிவைக்கும் வேலையை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல் தலைக்கனம் பிடித்து அலைகிறான்— பரிதாபம்...!
தன் சொந்த நலனை உத்தேசித்தும், மேற்கொண்டு பதவி உயர்வு பெறவும் அவன் இன்னமும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்...
வருகிற சனிக்கிழமை பாதுகாப்புப் பொறுப்பில் ஆர்டின் இருப்பான். அன்று சம்பள தினம் நான் ஒரு நாடகம் நடத்தப் போகிறேன் எல்லா முன் ஏற்பாடுகளும் ரெடி!
சம்பள பட்டுவாடாவுக்காக வந்து சேரும் பணத்தை நைஸாக அபேஸ் செய்யப் போகிறேன்— என் மீது யாருக்கும் சந்தேகமே வராது... ஆர்டின் என்ன பாடு படுவான் என்று கற்பனை செய்தால்... ஹா... ஹா... ஹா...


கரன்ஸி கட்டுகளை பெட்டகத்திலிருந்து அகற்றி விட்டு அங்கே கிண்டலாக ஒரு குறிப்பை வைப்பேன். எப்படி— 'கண்டதில்லை— கேட்டதில்லை— புரியவில்லை'— ஐயோ... பொங்கி வருகிறது சிரிப்பு... ஹா... ஹா... ஹா...
இதில் வேடிக்கை என்ன இருக்கிறது?
புரியவில்லையா? ஆர்டின் அதிர்ந்து போவான்! இல்லாத தெய்வங்களை எல்லாம் உதவிக்கு அழைப்பான்... கொஞ்ச நேரம் அவனை தவிக்க விட்டபின், பணத்தை நான் எங்கே வைத்திருக்கிறேன் என்ற உண்மையை வெளியிடுவேன்— எல்லோரும் மீண்டும் மகிழ்ந்து போவார்கள். ஆர்டினுக்கு அது ஒரு பாடமாக அமையும் ! நீ என்ன சொல்கிறாய்—இதைப்பற்றி?
நீங்கள் ஒரு உலக மகா பெருமைப் பிண்டம் என்று சொல்கிறேன்— அவ்வளவுதான்...!
ஆர்டின் தன் பொறுப்பை திறமையாக நிர்வகித்து வருவது உங்களுக்குப் பொறுக்கவில்லை அதனால் அவரை மட்டம் தட்ட நினைக்கிறீர்கள்... உங்களுடைய சூழ்ச்சித் திட்டம் மட்டமானது... மடத்தனமாது...!
போதாதென்று என்னையும் கூட்டுச் சேர அழைக்கிறீர்கள் - இதற்கெல்லாம் நான் சம்மதிப்பேன் என்று எதிர்பார்க்கிறீர்கள்?
வந்து... பார் சிக் பில்—நீ என்னைத் தவறாக புரிந்து கொண்டு விட்டாய்... விபரமாக சொல்கிறேன்— கேள்...
தேவையில்லை... சுயபுத்தி உங்களுக்குத்திரும்பிய பிறகு பேசலாம்— எதையும்...!


இவன் ஒத்துழைப்பான் என்று உறுதியாக நம்பினேனே -- சே... என்ன முட்டாள்தனம்...
தொலைகிறான்...! எப்படியும் ஆர்டினுக்கு பாடம் புகட்டியே தீர-வேண்டும் -- தனியாளாகவே செயல்படுத்துவேன்... என் திட்டத்தை!
போலியாக ஒரு திருட்டை உருவகப்-படுத்துவேன் நிலைமையை ஆர்டின் எப்படி சமாளிக்கிறான் என்று பார்ப்பேன்! ஆனால்...
ஓ .. அருமை — வெகு அருமை...!
சம்பள நாள் — தொகை ஓராயிரம் டாலர்களாவது தேறும் ! அத்தனையும் எனக்கே வேண்டும்...!
போய் ஆர்டினை எச்சரிக்க வேண்டுமா?
அவசியமில்லை — இன்ஸ்பெக்டர்... விவேகமாக நடந்து கொள்வார் என்று நம்புகிறேன்!
தன்னுடைய முட்டாள்தனம் புரிந்து விட்டிருக்கும். திட்டத்தை கைவிட்டு விடுவார்!
ஆனால்... அந்தோ —
நான் தயார்...! என்னுடைய ஆற்றலையும் என் அஸிஸ்டண்ட் ஆர்டினின் கையாலாகாத்-தனத்தையும் விரைவிலேயே ஜனங்கள் புரிந்து கொள்-வார்கள்..!


வெள்ளிக்கிழமை மாலை... வேலை நடக்கும் இடத்தில்— அனைத்தும் வழக்கம் போலவே...
பீப்!
அப்பாடா... ஒருவழியாக வாரம் முடிந்தது— போய் அலுப்புத் தீர நீண்ட தூக்கம் போடவேண்டும்...
வேலை கணிசமாக நடந்து விட்டிருக்-கிறது, இன்று...!
நாளை, கிங் பௌம்—பௌம் கடைசி பாறையையும் தகர்த்து விடுவார்— வெள்ள நீர் இந்தப் பக்கமாக திரும்பி பாயத் தொடங்கும்...
ஆமாம்! அனைத்தும் நல்லபடியாகவே நடந்து முடியும் என்று எதிர்பார்ப்-போம்!
என்ன... ஜூனியர் பாஸ்— நாளை ... சம்பள தினம்... அல்லவா?
ஆமாம்... ஆமாம்— மதியமே பணத்தைப் பெற்று வந்து விட்டேன்!
போய் கவலைப்படாமல் நிம்மதியாகத் தூங்-குங்கள்— அருமையான பூட்டும் சங்கிலியும்கூட வாங்கிவந்து விட்டேனே..!
இனி பணப்பெட்டியைத் திறக்க பௌம்– பௌமின் டைனமைட்டை பயன்படுத்தினால் தானுண்டு..! பாஸ் என் மதியூகத்தை பெரிதும் பாராட்டுவார்!
ஆமாம் எங்கே பார்த்தாலும் ஒரே திருடர்கள் மயம்!


இந்த சம்பள பணத்தைக் கூட இரவோடிரவாக திருடயாரேனும் திட்டமிடக்கூடும !
இவன் பேசுகிறதைப் பார்த்தால், இன்ஸ்பெக்டரின் கீழ்த்தரமான மோசடி திட்டத்தைப்பற்றி இவனுக்கும் ஏதோ தெரியும் போலிருக்கிறதே!
சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் தூங்கச் சென்று விடுவார்கள், இன்னும் இரண்டு மணி நேரத்தில், என் திட்டத்தை நான் செயல்படுத்தத் தொடங்குவேன்...
இரண்டு மணி நேரம் கழித்து--
என்ன சிக்பில்—தூக்கம் வரவில்லையா...?
ஆமாம்... மனதில் நிம்மதியில்லை—
ஒருவேளை அந்த மனிதர் தன் திட்டத்தைக் கைவிடாமல் முட்டாள்தனமாக செயலில் இறங்கி விட்டால்...?


எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன... பணம் இருக்கும் பெட்டகத்தை சாவி இல்லாமல் திறக்கவே முடியாதுதான்!
கொர்...ர்ர்!
படுத்துத் தூங்கு சிக்பில்- நாளை நிறைய வேலை இருக்கிறது!
வாஸ்தவம் தான்...! ஆனாலும் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்வேனே தவிர தூங்க மாட்டேன்!
நல்லவேளையாக விஷயத்தை நான் ஆர்டினிடம் உளறித் தொலைக்கவில்லை— அவராவது நிம்மதியாக தூங்குகிறாரல்லவா!
கொர்ர்... ர்ர்!
ஆகா...! இரவுகாவல் காரன் கூட இல்லை— வேலை வெகு சுலபமாகி விட்டது!
என் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஆனாலும் இப்படியா வஞ்சிப்பது?
திட்டத்தை கைவிட்டு விடலாமா? சிக்பில் சொன்னது சரிதான்! பொருமையால் இப்படி மூளை கெட்டதனமாக நடந்து கொள்கிறேன்.. வெட்கக்கேடு—
இல்லை—திட்டத்தை செயல் படுத்தத் நான் போகிறேன்! ஒரு இரவுக் காவல்காரன் கூட இல்லை... ஆர்டின் திறமையற்றவன் என்பதற்கு இதுவும் ஒரு நிருபணம்!
இதோ— இரும்புப் பெட்டகம் இதனுள்ளேதான் இருக்கிறது!


இதைக் கொண்டு முயன்று பார்க்கலாம்...!
அட... இந்தச் சங்கிலி—
ஏற்கனவே அறுந்து கிடக்கிறதே! சும்மா அப்படி மாட்டி வைக்கப்பட்டிருக்கிறது!
ஏமாற்று வேலை - சிக்பில் விஷபத்தை பரப்பியிருக்க வேண்டும் - என்னை கையும் களவுமாக பிடிக்க இந்த ஏற்பாடோ?
ஆனால்... யாரையும் அருகே காணுமே! எல்லோரும் அயர்ந்து தூங்குகிறார்கள்...!
இந்தக் காரியத்தை யார் செய்திருக்கக்கூடும்? உள்ளே— ஏதோ விவகாரம்...
படார்!
யாரையும் காணோமே?... காலம் கடந்து வந்து விட்டேனே? இங்கே விளக்கு ஏதேனும் இருக்கும் என்று நினைக்கிறேன்!
ஹேய்... யாரது உள்ளே? சட்டத்தின் பெயரால் ஆணையிடுகிறேன்— மரியாதையாக வந்து விடு... வெளியே!


ஓ... இதோ
இருக்கிறது —
ஆ.. ஐயோ —
ணங்!
...பிடியுங்கள் —
அரெஸ்ட் செய்யுங்கள்...
ஆபத்து —
—எழுந்திரு...
டமால்
க்ரீக்!
தீ..! உள்ளே...பணம்!
ஆண்டவனே...
டக். டக...டக்...டக—
யாரோ குதிரையில்
விரையும் சத்தம்!
நிலவரம் போகிற
போக்கு எனக்கு
கொஞ்சமும்
பிடிக்கவில்லை!


பணம் நிச்சயமாக காணாமற் போயிருக்கும்! சந்தேகமே இல்லை.
ஆனால் - ஆனால்...
நீங்கள்... நீங்களா இன்ஸ்பெக்டர்— அட... மயங்கி அல்லவோ கிடக்கிறார்!
யாரோ மண்டையில் பலமாக அடித்திருக்கிறார்கள். பணம் மாயமாக மறைந்து விட்டிருக்கிறது! என்ன இழவு விவகாரமோ...?
அம்மா!
யாரும் சுலபமாக தப்பித்து ஓடிவிட முடியாது! முதலில் தீயை அணைப்போம்!
யார் தீ வைத்தது? பணம் எங்கே போயிற்று?
இன்ஸ்பெக்டரல்லவா...? இவருக்கு இங்கே என்ன வேலை— இந்த நேரத்தில்!
அட... நம்ம பாஸ்! நல்ல நேரத்தில்தான் வந்து சேர்ந்திருக்கிறார்!
உங்களுக்கு இப்போது பரவாயில்லையா!
ஓ...என் தலை... ஞாபகம் வருகிறது— திருட்டுப் பயல் . ...— நான் நிரபராதி... நான் எந்த தப்பும் பண்ணவில்லை...
இவர் ஒரு மாதிரியான ஆள்தான்— சந்தேகமேயில்லை!
பழி தீர்த்துக் கொள்ள வந்திருப்பார்...
விடாதீர்கள் அவரை!


இன்ஸ்பெக்டர்தான் தீ வைத்திருக்கிறார்!
நம் பணத்தைத் திருடுவது அவர் நோக்கம்!
டைனமைட்டால் அவரைப் பிளக்க வேண்டும்!
சிக்பில் கருணை காட்டு என் கூற்றை யாரும் நம்பப் போவதில்லை! உண்மையான திருடன் பௌம்-பௌம்- என் கண்ணாலேயே பார்த்தேன்!
ஒரு நிமிஷம்...! ம்ம் சற்று முன் யாரோ குதிரையில் தப்பியோடும் குளம்பொலியை கேட்டேன்—! அது திருடனாக இருக்கலாம்... —ஓகே... ஒத்துக் கொள்கிறேன், நீங்கள் சொல்வதை!
ஐயோ இந்தக் குடிசையினுள், இரண்டு பெட்டி நிறைய டைனமைட்டுகளை பத்திரப்படுத்தி வைத்திருக்கும் விஷயம் இப்போதுதான் ஞாபகம் வருகிறது !
?
ஓடுங்கள்...!
எந்த வினாடியும் அது வெடிக்கலாம்...!
இங்கே நின்றால் ஆபத்து...!
டைனமைட்? குடிசையினுள் டைனமைட் இருந்ததா?
சுத்த மடத்தனம்! டைனமைட் பெட்டிகள் அனைத்தும் மேற்குப்புற டெப்போவில் அல்லவா இருக்கின்றன ! நேற்று நானே நேரில் பார்த்தேனே!
ஹே...! சிக் பில்— நீ சொல்வது தப்பு ..


டைனமைட் இந்தக் குடிசையினுள்...
சும்மா.... நாடகமாடினேன்! இன்ஸ்பெக்டரை கொல்லாமல் விடமாட்டார்கள் போலிருந்தது— பாவம்— அவர் அப்பாவி...
நன்றி... சிக் பில்! உனக்கு நிறைய கடமைப்பட்டிருக்கிறேன்— ஆயுளுக்கும்!
ஆர்டின்... நான் சொன்னபடி செய்யுங்கள்...! ஹோய் இன்ஸ்பெக்டர் தப்பியோடுகிறார்... ஓடிவாருங்கள்—
வெறிபிடித்த அந்தக் கூட்டம் என்னை விரட்டிப்பிடித்து விடலாம்! அதிக நேரத்திற்கு அவர்களைத் தேக்கிவைக்க சிக் பில்லினால் முடியாது .. கன்ஸ்மோக் சென்றடைய இப்போது எனக்கு அவகாசமும் கிடையாது.
இப்படி... மலைப் பிராந்தியத்தினுள் நுழைந்து விடலாம்...! இதை அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்க மாட்டார்களாதலால்... தப்பித்துக் கொள்ள அதிக வாய்ப்புண்டு!
GUNSMOKE
அந்த இன்ஸ்பெக்டர் பயல் இந்த வழியாகத்தான் தப்பியோடினானா... நிச்சயமாகத் தெரியுமா?
ஆமாம்... அப்படித்தான் நினைக்கிறேன்!



குதிரையின் குளம்பு தடம் ஏதும் காணப்படவில்லையே— இந்த வழியாக யாரும் செல்லவில்லை.!
ஸாரி... நான் சரியாக கவனிக்கவில்லை போலும்...!
தர்ம சங்கடமாகிக் கொண்டு வருகிறது என் நிலைமை!
நீங்கள் இன்ஸ்பெக்டருக்கு அனுசரணையாக நடந்து கொள்ளப் பார்க்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள்... சீக்கிரமாக ஏதாவது முடிவு செய்யுங்கள்— க்விக்...!
ஓ அதோ— அங்கே... பாறை முகட்டில்—
...அங்கே ஒரு மனிதன் தென்பட்டான் இப்போது – அது, நிச்சயமாக அந்த இன்ஸ்பெக்டர் பயலாகத்தானிருக்கும்!
வாருங்கள்... போய் பிடிப்போம்!
கட்டிப்போட கயிறு இருக்கிறதல்லவா?
நல்ல தந்திரம் செய்தாயடா பயலே...!
இனி நான் உண்மையான குற்றவாளியை தேடிச் செல்லலாம்- கிங் பௌளம்-பௌளமை சோதனை போட்டாக வேண்டும்!
அந்த அயோக்கிய சிகாமணி தன்னை துரத்திக்கொண்டு வருவார்கள் என்று எண்ணி, ஒளிந்து கொள்ள இந்த மலைப்பாதை வழியே போயிருக்கக் கூடும்


கன்ஸ்மோக் செல்வதானால் மீண்டும், பணி நடக்குமிடத்துக்கு வந்து தானே போகவேண்டும்...! எங்கேதான் ஒளிந்து கொண்டிருப்பான்... அந்த மனிதன்?
பாழடைந்த செப்பு சுரங்கத்தினுள் நுழைந்து கொண்டிருக்கக் கூடும்- அருமையான மறைவிடமாயிற்றே அது! நிச்சயம் அங்கேதானிருப்பான்!
சுரங்க உரிமை: ரே ஒயிட்! அபாயம்! உள்ளே போகும் நபர் வெளியே உயிரோடு வருவது உறுதியல்ல பின்னர் உங்கள் இஷ்டம்!
ஓ...எத்தனை பயங்கர அச்சுறுத்தல் — அந்த அறிவிப்பு பலகையில்!
பாறைகளில் தடங்கள் தெரிய வாய்ப்பில்லை—துரதிர்ஷ்டம் தான்! பௌம்—பௌம் இந்தப் பக்கமாக வந்தானா இல்லையா என்று எப்படி நான் உறுதி செய்து கொள்வது?
ஹீ..ஹீ..
ஓ அந்த குதிரையின் கனைப்பு...?
அந்த சப்தம் புறப்பட்ட இடத்தை, மிகுந்த எச்சரிக்கையோடு நடந்து சென்றடைய வேண்டும்...


இதற்கிடையே, கூட்டம் ஆர்டினின் தலைமையில் இன்ஸ்பெக்டரைத் தேடி விரைந்தது ...
அட்டகாசமான நடவடிக்கை இல்லையா.. ?
ஆமாம்— ஆனால்... நாம் சற்று நிதானமாக செல்வதால் என்ன கெட்டுவிடும்? ஏன் இப்படி தலை தெறிக்க விரைய வேண்டும்!
என்ன உளறுகிறாய்? பாஸ் தப்பியோடி விட்டார்! எல்லோரும் ஆத்திரத்தோடு இருக்கிறார்கள்... அவரை விரட்டிச் செல்ல வேண்டும்— ஆனால்? பிடிக்கக்கூடாது! ஏதோ... வேடிக்கை விவகாரம் என்று எண்ணினேன்— நிஜமாகவே நிலவரம் மிக மோசமாகிப் போய்க் கொண்டிருக்கிறது!
ஆர்டினின் கவனம் பேச்சிலும் சிந்தனையிலும் இருந்ததால் குதிரை கட்டுப்பாடிழந்து போனது ...
ஆ...ஐயோ—அ . ம்...மா
ஓ அடி பலமா?
காயம் பட்டு விட்டதா... என்ன?
முதலுதவிப் பெட்டி எங்கே இருக்கிறது?
இந்த ஆர்டினை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இவருடைய குழப்படியான நடவடிக்கைகளால், இன்ஸ்பெக்டர் வெகு தூரம் விலகிச் சென்று விட்டிருப்பார் இன்னேரம்! அவரை இனி பிடிக்கவே முடியாது!


அதே வேளையில்..
அவர்களை ஏமாற்றி திசைதிருப்பி விட்டாயிற்று...! பாதையில் ஏகப்பட்ட கொண்டையூசி திருப்பங்கள்— இந்தப் பாதை எங்கேதான் என்னை இட்டுச் செல்கிறதோ... ஒரு இழவும் புரியவில்லை...!
என்னைத் துரத்தி வருபவர்களிடமிருந்து வெகு தொலைவு சென்று விட வேண்டும என்பதுதான் இப்போதைக்கு முக்கியம் ! ஓ... கணவாயின வெளி முனைக்கு வந்து விட்டேன் போலிருக்கிறது— ம்ம்... இனி எந்தப் பக்கமாக பயணத்தை தொடர்வது ?
ஓ...அதோ—பாஸ்! ஓட்டப் பந்தயம் ஒருவழியாக முடிவுக்கு வந்து விட்டது!
இதனுள்ளே நுழைந்து தேடிப் பார்க்கலாம்...
ஓ... இங்கே ஒரு திருப்பம்...
ஒரே இருட்டு . நான் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! பௌம்— பௌம் இங்கே பதுங்கி இருந்தால், என்னை சுலபமாக குறிவைத்து தாக்கி விடக்கூடும்!


எந்த சந்தடியும் இல்லை--இன்னும் கொஞ்சம் தூரம் முன்னேறிச் சென்று பார்க்கலாம்...
ஓ...இங்கே பாதை முற்றுப்பெற்று விட்டது... என் முயற்சி வீண்—திரும்பி நடக்க வேண்டியதுதான்!
க்ர்...ர்ர்ர்...
அது என்ன விநோத ஒலி...
இந்த இரைச்சல்—தண்டவாளத்தின் மீது ஏதோ விரைந்து வருகிறது . —என்னை நோக்கி!
கடவுளே--புரிகிறது... விஷயம்!
ஆமாம்... —அவன் இங்கு தானிருக்கிருன்!


நிறைய டைனமைட்டுகளை சுமந்து கொண்டு விரைந்து வருகிறது ஒரு டிராலி!
அதை சமாளிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு...
ஊப்...ப்ப்!
முக்கியமான ஒரு தகவல் சமயத்தில் நினைவுக்கு வந்தது என் அதிர்ஷ்டம் தான்...
சற்று தாமதித்தாலும் விளைவு விபரீத-மாகிப் போகும்!



இப்படி அணைத்து விட்டு...
விரைந்து ஓடிப் போய் விட வேண்டும்... அந்த டிராலி முட்டுச் சுவரில் போய் மோதுவது நிச்சயம்...
சற்றுத் தொலைவில்—
நான் அனுப்பிய பரிசுப் பொருள் சீக்கிரமே அவனை சென்றடையும்!
பூம்!
வெற்றி... வெற்றி— ஆனால்...!
சத்!
சத்! சத்!
சத்!


டைனமைட் வெடித்ததில் இந்தப் பழைய சுரங்கத்தின் கூரை பயங்கரமாக அதிர்கிறதே!
எல்லா இடங்களிலும் பிரிந்து கொண்டு விட்டது...
சில மீட்டர்களுக்கு அப்பால்--
க்ரா...ஈர்...ஈர்ரா...
ஓ...என்னதான் நேரிட்டது?
பௌம்--பௌம்...!
ஆவ்-- கூரை சரிகிறது...
க்ராக்!
ஹீ ஈஈ... ஈஈ...!


அங்கே நிற்காதே .. ஓடி வந்து விடு—
கீரீக்க்.
ஊப்ப்... ஆ ஆ . ஹாவ்வ்...!
கைகளை உயர்த்து பௌம்— பௌம்! மோசடி நாடகம் .. முடிவுக்கு வந்து விட்டது!
சிரிக்கிறாயா ... என்ன திமிர்... உனக்கு? உன்னைக் கைது செய்கிறேன்!
சரி... அப்படியே வைத்துக் கொள்வோம்! ஆனால் என்னை நீ எப்படி வெளியே அழைத்துப் போவாய்! உயிரோடு சமாதி வைத்த மாதிரி உள்ளே மாட்டிக் கொண்டி-ருக்கிறோம்! விரல்களால் பிராண்டி வழி ஏற்படுத்தப் போகிறாயா...ஹாஹ்.. ஹா!


வெளியேற வழியை தேடுகிறாயா...? ஊஹும்... வகையாக சிக்கிக் கொண்டு விட்டோம்... தம்பி! நாலா திசைகளிலும் பாறைகள் குவிந்து கிடக்கின்றன .!
வாஸ்தவம்தான்..! நம் தலைமீது கூரை விழாததற்காக நாம் சந்தோஷப் படுவதா... இல்லை, இப்படி வெளி-யேற முடியாதவாறு மாட்டிக் கொண்டதற்காக வருத்தப்படுவதா... தெரியவில்லை!
ஹா...! என் குதிரைதான்... கனைக்கிறது! அன்பே...நீ கூரை அழுந்தி செத்துப் போகவில்லையா! என் குதிரை உயிரோடு இருக்கிற தென்றால், நமக்கு இன்னும் நிறைய வாய்ப்பு இருக்கிறது என்றாகிறது!


என் குதிரை இந்தப்பக்கம் வர முடிகிறது என்றால் அங்கே ஒரு வழி இருப்பது உறுதி ...
அதை நான் கண்டு பிடித்தேயாக வேண்டும்— எப்பாடுபட்டேனும் !
ஏம்பா .. நீ கொஞ்சம் ஒத்தாசை செய்யக் கூடாதா— பிரச்னை இரண்டு பேருக்குமே பொது தானே!
நான் ஏன் இந்த முயற்சியில் உதவ வேண்டும்? வெளியேற வேறொரு சுலபமான உபாயமுண்டு— ஆனால் நீ அதை நினைத்துப் பார்த்ததாகவே தெரியவில்லை
அப்படியா.. ! எங்கே— சொல்லேன்...!
இதோ— இதுதான்...!
ஓ! டைனமைட்...! இதை எப்படி நான் மறந்து தொலைத்தேன்!... நானொரு வடிகட்டின முட்டாள்!
இதில் நான் சமர்த்தன்! இந்த முயற்சியில் நான் வெற்றி பெறாவிடில் தொழிலை மாற்றிக் கொண்டு விடுவேன்— இது சத்தியம்!— சரி... வத்திப்-பெட்டி கொடு...!


வத்திப் பெட்டியா—
என்னிடம் ஏது?
ஐயோ... என்ன கொடுமை இது! கனடா வரை சுரங்கப் பாதை ஏற்படுத்த போதுமான டைனமைட் கையிருப்பில் உள்ளது. ஆனல்... அந்தோ— ஒரு தீக்குச்சி கைவசம் இல்லையே...!
அங்கே... அப்பாவி இன்ஸ்பெக்டரை துரத்திச் சென்று கொண்டிருக்கிறது வெறி பிடித்த ஒரு கும்பல்—
எல்லா விவகாரமும்— உன்னல் தான்...
ஹே... ஆத்திரப்படாதே ! அமைதி... அமைதி!
ஓ... தண்டவாளம்— இங்கே அடியில் தான் இருக்கும்!
எதற்கு?
உலோகத்தினலானது அல்லவா அது ..
என் எல்லா தண்டவாளங்களுமே உலோகத்தி லானவை தானே...
ஆகா...! இதோ—


தொப்பியை இப்படிக் கொடு – உன் மரமண்டைக்கு இனிமேலும் இந்த அலங்காரம் எதற்கு?
பயலுக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ...
வெற்றி கிட்டும் வாய்ப்பு குறைச்சல் தான். ஆனால் நம்பிக்கையை நாம் கைவிடலாகாது...—ம்ம்... உன்னிடம் காகிதம் ஏதாவது இருக்கிறதா!
இல்லே...! ஆனால் டாலர் நோட்டுக்கள் ஏகப்பட்டவை இருக்கின்றன. அங்கே-யிருந்து நான் கிளப்பிக் கொண்டு வந்த கரன்ஸிகள் தான் ..! ஒன்றுக்கும் பிரயோஜனமில்லே— ஷாப்பிங் போக இங்கே ஏது வசதி?
அப்படியில்லே! இவைதாம் நாம் உயிரோடு தப்பி வெளியேற உதவப் போகின்றன— பொறுத்திருந்து பார்!
தோட்டாக்களே வெளியில் எடு...— அவையும் வேண்டும!
ஓ... உன் திட்டம் என்ன-வென்று மெள்ளப் புரிகிறது!
பிரமாதமான ஐடியா!


அதே வேளையில் — அங்கே
ஹே...! அந்த போக்கிரியின் வாதத்தை கேட்டது போதும்— தூக்கில் போட்டு விடலாம்...!
ப்ளீஸ்... நான் சொல்வதை சற்று காது கொடுத்துக் கேளுங்-களேன் ... யாராவது!
சொல்வதை நீ அங்கே சித்ர குப்தனிடம் சொல்லிக் கொள்— திருட்டு ராஸ்கல்...!
குதிரையை இழுத்து விட்டார்கள் என்றால், இன்ஸ்பெக்டர் தூக்கில் தொங்கி செ த்துப்போய் விடுவார்...!
ஓ ... நிலைமை படுமோச-மாகி விட்டது... சிக் பில் இன்னமும் திரும்பி வரக் காணோம்.... என்ன செய்வ-தென்றே புரியவில்லை!
நாமே புகுந்து விளையாடி விட வேண்டியதுதான...


உங்களில் முதலில் அசைபவனின் உடம்பில் துளை போட்டு விடுவேன்;— ஜாக்கிரதை...!
ஓ...செவ்விந்திய தோழா...! உனக்கு ரொம்ப இரக்க சுபாவம்— எனக்குத் தெரியும்!
குட்டிச் சைத்தானே...! நீயும் அவனோடு கூட்டா?
இவனையும் தூக்கிலிடுங்கள்!
திட்டமிட்ட சதி—
அந்தப் பொடியன் எல்லோரையும் ஒரே நேரத்தில் கண்காணிக்க முடியாது... நான் நைஸாக என் ரிவால்வரை எடுத்து...
?
அப்படியே நில்லுங்கள்--அனைவரும்...! சிக் பில் திரும்பி வரும் வரை யாரும் வாயைத் திறக்கக்கூடாது!


ஆனால் அங்கே— வெளியேற வகையின்றி தவித்துக் கொண்டிருந்தான் சிக் பில்...
நெருப்புப் பொறி... எங்கே?
சை...! வந்து தொலைக்க மாட்டேனென்கிறது— என்ன தான் முயற்சித்தும்!
ஹே- எவ்வளவு நேரம் தான் நாங்கள் இப்படியே நிற்கிறது? என்ன விளையாடுகிறாயா?
சந்தர்ப்பம் வாய்க்கும் போது பழிவாங்காமல் விடமாட்டோம்!
சத்தியமாக அவர்களை தாக்குவதல்ல என் நோக்கம்- கோபக்காரர்கள்- ஆனால் மோசமானவர்களல்ல!
ஹலோ! மகா ஜனங்களே- என்னிடம் குற்றம் குறைகள் உண்டு- ஆனால் உங்களுடைய பணத்தை சத்தியமாக நான் திருடவில்லை!
டூம்!


மடார்!
இந்தப் பொடியனை நாங்கள் அமுக்கி விட்டோம்!
மூன்று கூட்டாளிகளையும் ஒட்டு மொத்தமாக தூக்கில் போட்டு விடலாம்!
என்னடா இது விநோதம்! பௌம்-பௌம் போய்த் தொலைந்த பின்னும் இங்கே வெடி விபத்து நிகழ்கிறது!
ஹா! ஹா! வீழ்த்தி விட்டேன்- இவனை!
அங்கே செப்புச் சுரங்கத்தில்-
தீப்பொறி கிளம்பியதைக் கண்டோம்- அனைத்தும் கண்ணிமைக்கும் பொழுதில் நடந்துவிட்டது!
அ-அஹ்! ஒரு வழியாக வெளியேறி விட்டோம்!
ம்ம்- கிளம்பு சீக்கிரம்! அங்கே தொழிலாளிகள் உன்னுடைய வாக்குமூலத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்!
என்னுடைய லெட்டர் எங்கே- ம்ம்- இதோ!


நடக்காது தம்பி! லேசில் சரணடைந்துவிடக் கூடியவனல்ல இந்த பௌம்-பௌம்!
தொடாதே என்னை! கிட்டே வந்தாயானால் இதை-
கும்!
என்ன பூச்சாண்டி காட்டுகிறாய்? பயந்து விடுவேன் என்று நினைத்தாயா?
எனக்கு நல்ல ஞாபகசக்தி உண்டு- தெரிந்து கொள்- இந்த டைனமைட்டுகள் வெடிக்க திரி அவசியம் என்று நீ சொல்லியிருக்கிறாயே!
என்னை ஏன் வயிரினால் பிணைக்கிறாய்- இப்படி?
வேடிக்கையாக தோன்றுகிறதா?
ஒரு டைனமைட் நிபுணரை அச்சுறுத்தி அடக்கி வைக்க ஒரு டைனமைட் குச்சி போதும்- ஹா! ஹா!
உன்னுடைய லைட்டர் இதோ என் கையில்! நீ ஏதாவது விஷமம் செய்ய முயன்றால் பற்ற வைத்துவிடுவேன்- புரிகிறதா?
உப்-உப்!


இதற்கிடையே-
கடைசியாக கேட்கிறோம்- திருடிய பணத்தை எங்கே வைத்திருக்கிறாய்?
ஆர்டின்- நீதான் விவரம் கெட்ட ஆசாமி என்று நினைத்தேன்.இவர்கள் உன்னையும் மிஞ்சி விட்டார்கள்!
ஓ- நன்றி பாஸ்- பாராட்டு வார்த்தைகளுக்கு!
அவர்கள் பேசிக் கொள்வதைப் பார்த்தால் ..
ஆமாம்- எனக்கும் சந்தேகம் தான்!
என்னடாது- புதுக் குழப்பம்!
இப்போது நீங்கள் நினைப்பது சரிதான் தோழர்களே!
ஆகா- சிக்பில்!
ஓ- டைனமைட் ஆசாமி!
காணாமற்போன சம்பளப் பணம் அதோ-
சில நோட்டுகள் குறையக் கூடும்- காரணத்தை பிறகு விளக்குகிறேன்!




"லயன் புக் ஹவுஸ்" நிறுவனத்தின் சார்பாக "ஜூனியர் லயன் காமிக்ஸ்" ஐ வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் புக் ஹவுஸ், த. பெ. எண். 55' சிவகாசி-626 123. போன்: 21159. வெளியீடு எண்: 3
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626 123.



அடுத்த வெளியீடு!
புதிர் குகை!
முழு வண்ணத்தில்



கோடை மலர்!
கோடை.
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
ARCHIE
லயன்
காமிக்ஸ்
ரூ. 5/-
அடுத்த வெளியீடு!
ஏப்ரல்
15ல்
கிடைக்கும்!



கோடை மலர்!
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
கோடை
மலர்
ARCHIE
லயன் காமிக்ஸ்
ரூ. 5/-
அடுத்த வெளியீடு!
ஏப்ரல் 15ல் கிடைக்கும்!




ஜூனியர் லயன்காமிக்ஸ்
அதிரடி மன்னன்!
ரூ. 1-25